www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 6**
**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச் – 2024**
**வரலாறு – விடைக்குறிப்புகள்**

**குறிப்பு**

1. **நீலம்** அல்லது **கருப்பு** மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி – 1–ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைக்குறிப்புடன் பாடப்புத்தகத்தில் உள்ள விடைகளுக்குத் தகுந்த மதிப்பெண்களையும் கொடுக்கலாம்.

**பகுதி – I** **மொத்த மதிப்பெண்கள்– 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20x1=20**

| வினா எண் | விடைக் குறியீடு | A TYPE | வினா எண் | விடைக் குறியீடு | B TYPE |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | பாரசீக | 1 | ஈ | இரண்டாம் தேவராயர் |
| 2 | ஆ | பெருநற்கிள்ளி | 2 | ஈ | இராமபாலர் இராம சரிதத்தை எழுதினார் |
| 3 | அ | புதிய தலைப்பாகை | 3 | ஈ | முதலாம் இராஜேந்திரன் |
| 4 | ஈ | வில்லியம் பெண்டிங் | 4 | ஆ | சமஸ்கிருதம் |
| 5 | ஆ | மகாவம்சம் | 5 | அ | துய்ப்ளே |
| 6 | ஆ | பிம்பிசாரர் | 6 | ஈ | வில்லியம் பெண்டிங் |
| 7 | ஈ | இரண்டாம் தேவராயர் | 7 | ஆ | பெருநற்கிள்ளி |
| 8 | அ | 1 (ii), 2 (i) 3 (iv) 4 (iii) | 8 | ஆ | பிம்பிசாரர் |
| 9 | ஈ | இராமபாலர் இராம சரிதத்தை எழுதினார் | 9 | ஆ | மகாவம்சம் |
| 10 | ஈ | கிரேக்க | 10 | ஆ | கோவா |
| 11 | இ | பட்டாடக்கல் | 11 | ஈ | பாரசீக |
| 12 | ஆ | கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கமாகும் | 12 | இ | பட்டாடக் கல் |
| 13 | ஆ | W.C.ஜாக்சன் | 13 | ஈ | விக்ரம சீலா |
| 14 | ஈ | சமுத்திரகுப்தர் | 14 | ஆ | கியுனிபார்ம் |
| 15 | ஆ | கியூனிபார்ம் | 15 | ஆ | கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கமாகும் |
| 16 | அ | துய்ப்ளே | 16 | ஈ | கிரேக்க |
| 17 | ஆ | சமஸ்கிருதம் | 17 | ஆ | W.C.ஜாக்சன் |
| 18 | ஈ | விக்ரம சீலா | 18 | அ | 1 (ii), 2 (i) 3 (iv) 4 (iii) |
| 19 | ஈ | முதலாம் இராஜேந்திரன் | 19 | ஈ | சமுத்திரகுப்தர் |
| 20 | ஆ | கோவா | 20 | அ | புதிய தலைப்பாகை |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

## பகுதி – II

**பின்வருவனவற்றுள் ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடை அளித்திருக்க வேண்டும்.**
**(வினா எண் 30க்கு கட்டாயம் விடை அளிக்கவும்) 7 x 2 =14**

| வினா எண் | ஏதேனும் இரண்டு குறிப்புகளுக்கு இரண்டு மதிப்பெண்கள் அளிக்கவும் | மதிப் பெண் |
|---|---|---|
| 21 | **பழங்கற்காலம்**<br>• வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் எனப்படுகிறது.<br>• இது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.<br>• கீழ்ப்பழங்கற்காலம், இடைப்பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம்<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 22 | **வேதகால இலக்கியம்**<br>• வேதங்கள் நான்காகும்<br>• ரிக், யஜுர், சாம, அதர்வவண வேதங்களாகும்<br>• இவற்றில் ரிக் வேதம் பழமையானதாகும்<br>• பிராமணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்கள் வேத காலத்தின் இறுதியில் இயற்றப்பட்டதாகும். **(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 23 | **ஜனபதங்கள், மகாஜனபதங்கள் வேறுபாடு**<br>**ஜனபதங்கள்**<br>1. மக்களின் ஆதரவு கணத்திடமிருந்து (இனக்குழு) ஜனபதத்திற்கு (பகுதி) மாற ஆரம்பித்தது.<br>2. ஜனபதம் என்ற சொல்லுக்கு இனக்குழு தன் காலைப் பதித்த இடம் என்று பொருள்<br>3. ஜனபதங்கள் வளங்களுக்காகவும், அரசியல் மேலாதிக்கத்திற்காகவும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன<br>**மகாஜனபதங்கள்**<br>1. ஒரு நாட்டிற்கு நிலம், மக்கள் அரசாங்கம் இறையாண்மை ஆகியவை முக்கிய கூறுகளாகும்.<br>2. இவ்வனைத்து கூறுகளும் சில மகாஜனபதங்களில் காணப்பட்டன.<br>3. மகாஜனபதங்கள் மக்களை (ஜனங்களை) ஆண்ட பிரதேச முடியரசுகள் உருவானதை பிரதிபலித்தன. **(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 24 | **பிம்பிசாரர்**<br>1. பிம்பிசாரர் மகதத்தின் முதல் அரசராக அறியப்படுகிறார்.<br>2. அவர் திருமண உறவுகள் மற்றும் போர்கள் மூலம் மகதப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினார்.<br>3. கோசல அரசர் பிரசேன ஜித்திற்கு தனது சகோதரியை மணம் செய்து கொடுத்ததின் மூலம் காசியை வரதட்சணையாகப் பெற்றார்.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 25 | **அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்**<br>(i) அதிகளவு முத்துக்கள், மிளகு, தந்தம், பட்டுத்துணி, வோ்த்தைலம், இலவங்கப்பட்டை, தாளிசபத்திரி எனும் நறுமணப்பொருள் நீலக்கல், கோமேதகம், வைரம் ஆமை ஓடு.<br>(ஆ) **ரோமிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்**<br>• நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மது வகைகள்<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 26 | **ஹுணர்கள்**<br>• ஹுணர்கள் காஸ்பியன் கடலருகில் வாழ்ந்த பழங்குடி இனக் குழுக்கள்<br>• ரோமாபுரி பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள்.<br>• அட்டில்லாவின் தலைமையில் திரண்ட இவர்கள் ஐரோப்பாவின் கொடுங்கோண்மைக்குப் பெயர் பெற்றவர்கள்.<br>• ஹுணர்களின் படையெடுப்பால் குப்தர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 27 | **பால வம்ச நாலந்தா பல்கலைக் கழகம்**<br>• சுவர்ணதீபத்தை (சுமத்ரா) ஆண்ட சைலேந்திர வம்சத்து அரசரான பாலபுத்திர தேவரால் நாளந்தாவில் கட்டப்பட்ட புத்த மடாலயத்தைப் பராமரிப்பதற்காக 5 கிராமங்களை தேவபாலர் கொடையாக வழங்கினார்.<br>• தேவபாலர் ஆட்சியில் நாளந்தா புத்த மதக் கொள்கைகளைப் போதிக்கும் முதன்மை மையமாக தழைத்தோங்கியது. | 2 |
| 28 | **சாளுக்கியர் கால கன்னட இலக்கியங்கள்**<br>கவிராஜமார்க்கம், பம்பா பாரதம், விக்கிரமார்ஜுன விஜயம்<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 29 | **ராஜபுத்ர வம்சாவளிகள் (ஏதேனும் இரண்டு குறிப்புகள்)**<br>துருக்கிய படையெடுப்பின் போது வட இந்தியாவில் இருந்த ராஜபுத்திர வம்சாவளிகள்<br>டோமர் – டெல்லி, சௌகான்– இராஜஸ்தான், சோலங்கி– குஜராத்<br>பரமர் – மாள்வா, கடவாலா– கன்னோஷி, சந்தேலர் – பண்தேல்கண்ட் | 2 |
| 30 | **அர்த்த சாஸ்திரம்**<br>1. அர்த்த சாஸ்திரத்தை இயற்றியவர் சாணக்கியர் என்ற கௌடில்யர் ஆவார்.<br>2. நிர்வாகம் பற்றிய மிக விரிவான பதிவுகளை அர்த்த சாஸ்திரத்தில் காணலாம்.<br>3. இந்தப் படைப்பே மௌரிய பேரரசு சில நூற்றாண்டுகள் பிந்தையது என்ற ஆய்வாளர் கருத்தையும் மனம் கொள்ள வேண்டும்.<br>4. எனினும் அர்த்த சாஸ்திரம் நல்ல நிர்வாகத்திற்கான ஒரு வழிகாட்டி நூல் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |

## பகுதி – III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை அளிக்கவும்** **7 x 3 =21**
**(வினா எண் 40க்கு கட்டாயம் விடை அளிக்கவும்)**

| வினா எண் | எவையேனும் மூன்று குறிப்புகளுக்கு மூன்று மதிப்பெண்கள் அளிக்கவும். | மதிப் பெண் |
|---|---|---|
| 31 | **ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள்**<br>1. சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டனர்<br>2. அரச மரங்கள் வழிபாட்டுக்குரியதாக இருந்திருக்கலாம்.<br>3.சில சுடுமண் உருவங்கள் தாய்த் தெய்வத்தைப் போல் உள்ளன.<br>4. ஹரப்பா மக்கள் இறந்தோரை புதைத்தனர்.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 32 | **தென்னிந்தியாவில் செம்புக் கால பண்பாடு**<br>1. ஒரு முழுமை பெற்ற செம்புக் கற்காலப் பண்பாடு தென்னிந்தியப் பகுதிகளில் நிலவியதற்கான சான்றுகள் இல்லை.<br>2. சில இடங்களில் துளையிட்ட பாண்டங்களும், கெண்டி வடிவிலான பாண்டங்களும் கிடைத்துள்ளது.<br>3. கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.<br>4. செம்பினாலும் வெண்கலத்திலுமான கருவிகள், கோடாரிகள் இங்கு கிடைக்கின்றன.<br>5. வேளாண்மையும், கால்நடைவளர்ப்பும் இக்கால மக்களின் வாழ்வாதாரமாக இருந்துள்ளன.<br>6. சிறுதானியங்கள், பயிறு வகைகள், கொள்ளு போன்றவற்றை சாகுபடி செய்த மக்கள் பழங்களையும், இலைகளையும், கிழங்குகளையும் சேகரித்து உண்டு வாழ்ந்தனர். **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 33 | **கங்கைச் சமவெளியில் நகழ்ந்த நகரங்களின் தோற்றத்திற்கான காரணங்கள்**<br>1. வேளாண் உபரி கைத்தொழில், வணிக வளர்ச்சி, பெருகிக் கொண்டிருந்த மக்கள் தொகை ஆகியவை கங்கைச்சமவெளியில் நகரங்கள் தோன்றியதற்கு வழி வகுத்தன.<br>2. இது இந்திய வரலாற்றில் இரண்டாம் நகரமயமாக்கல் என்று குறிப்பிடப்படுகிறது.<br>3. இரும்பு தொழில் நுட்பத்தினால் "நகரமயமாக்கம் " வளரக் காரணமானது. | 3 |
| 34 | **குப்தர்கள் கால அறிவியல் வளர்ச்சி**<br>1. சுழியம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்தது.<br>2. சூரிய சித்தாந்தம் என்ற நூலில் ஆரியப்பட்டர் சூரிய கிரகணங்களில் உண்மையான காரணங்களை ஆராய்ந்தார்.<br>3. பூமி ஒரு அச்சில் தன்னைத்தானே சுற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்த முதல் வானவியலாளர் அவர் தாம்.<br>4. வராகமிகிரரின் "பிருஹத் சம்ஹிதா" என்ற நூல் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக்களஞ்சியமாகும்.<br>5. பிரம்மகுப்தர் கணிதம் மற்றும் வானவியலுக்கான முக்கிய நூல்களான "பிரும்மஸ்புத– சித்தாந்தா, கண்டகாதயகா "ஆகியநூல்களை எழுதியுள்ளார்.<br>6. நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள் மற்றும் மருந்துகள் தயாரிக்கும் முறையை குறிப்பிடுகிறது.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 35 | **இரண்டாம் அலெக்சாண்டார்**<br>1. அலாவுதீன் ஹசன் பாமன்ஷா இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்படுகிறார்<br>2. 11 ஆண்டுகள் பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி சிறப்பாக ஆட்சிசெய்தார்.<br>3. வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்ட வீடு ஆகியவற்றிலிருந்து வருடம் தோறும் கப்பம் பெற அவர் மேற்கொண்ட முயற்சி பல போர்களுக்கு இட்டுச் சென்றது.<br>4. இவர் தான் வெற்றி பெற்றதை நினைவு படுத்தும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை "இரண்டாம் அலெக்சாண்டர்" என்று பொறித்துக்கொண்டார். **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 36 | **சூர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகள்**<br>**1.சூர்தாஸ்**<br>1.அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்தவர் சூர்தாஸ் ஆவார்.<br>2.ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகன் எனப் புகழப்பட்டார்.<br>3.சூர்தாஸ் அன்பெனும் மதத்தையும், தனிப்பட்ட கடவுளிடம் பக்தியோடு இருப்பதையும் போதித்தார்.<br>4.சூர்தாஸின் கவிதைகளில் கிருஷ்ணருடைய பாலலீலா முக்கிய கருப்பொருளாக விளங்கியது.<br>**2. துக்காராம்**<br>1.சத்ரபதி சிவாஜி, ஏக்நாத், ராமதாஸ் போன்றோரின் சமகாலத்தவர்.<br>2.தன்னுடைய அபங்க பாடல்களை மாரத்திய மொழியில் இயற்றினார்.<br>3.சமத்துவம், சகோதரத்துவத்தை பரப்பினார்.<br>4.கடவுள் வடிவமற்றவர் என்று நம்பினார்<br>5.கடவுள் பற்று, மன்னிக்கும் மனப்பாங்கு மற்றும் மன அமைதியை போதித்தார்.<br>6.வேத வேள்விகள், சடங்குகள், புனிதப்பயணங்கள், உருவ வழிபாடு ஆகியவற்றை நிராகரித்தார். **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 37 | **அக்பரது மன்சப்தாரி முறை**<br>1. அக்பர் மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார்.<br>2. பிரபுக்கள், குடிமைப் பணி சார்ந்த நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின்கீழ் கொண்டு வரப்பட்டனர்.<br>3. ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.<br>4. மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது.<br>5. இதில் சவார் என்பது குதிரைகளின் எண்ணிக்கையை குறிப்பதாகும்.<br>6. ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரரின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும்.<br>7. அவ்வெண்ணிக்கை 10 முதல் 10,000 வீரர்கள் வரை ஆனதாகும்.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 38 | **தரங்கம்பாடி**<br>1. 1620 நவம்பர் 20ஆம் தேதி கையெழுத்தான அவ்வொப்பந்தத்தின்படி டேனியர்கள், தரங்கம்பாடியில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையைப் பெற்றனர்.<br>2. டென்மார்க்கிற்கும், தரங்கம்பாடிக்கும் இடையிலான வணிகம் மீண்டும் நடைபெறத் துவங்கியது.<br>3. தஞ்சாவூர் நாயக்க அரசர் தரங்கம்பாடியைச் சுற்றியிருந்த மேலும் மூன்று கிராமங்களைப் பரிசாக அளித்தார்.<br>4. தரங்கபாடியில் டேனியல் கட்டிய கோட்டை இன்றும் சீர்கெடாமல் உள்ளது.<br>5. இறுதியாக டேனியர்கள் தரங்கம்பாடியை ஆங்கிலேயருக்கு விற்றனர்.<br>6. சீகன்பால்கு ஓர் அச்சுகூடத்தை நிறுவினார், தமிழ்மொழி, இந்திய மதங்கள், பண்பாடு குறித்த நூல்களை வெளியிட்டார்.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 39 | **அகமதியா இயக்கம்**<br>1. மிர்சா குலாம் அகமது என்பவரால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் ஒரு மாறுபட்ட போக்கை ஏற்படுத்தியது.<br>2. குரானில் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என்று கூறிய அவர் தன்னை தீர்க்கதரிசி என்று கூறி | 3 |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | சர்ச்சையை ஏற்படுத்தினார்.<br>3. சமூக நெறிமுறைகளில் அகமதிய இயக்கம் பழமைவாக கண்ணோட்டதுடனே பலதாரமணம், பெண்கள் முகத்திரை அணிவது போன்றவற்றையும் விவாகரத்து பொறுத்தமட்டில் பழமையான விதிகளையும் பின்பற்றினார்.<br>4. ஆரிய சமாஜத்திற்கும், கிறித்துவ சமய போதகர்களுக்கும் எதிரான விவாதங்களை மேற்கொண்டது. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | |
| 40 | **குருநானக்**<br>1. குருநானக்கால் நிறுவப்பட்டது சீக்கிய மதம் ஆகும்.<br>2. அவருடைய கொள்கை மத ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு பண்பாடு ஒற்றுமைச் கிந்தனையைப் பறை சாற்றுகிறது.<br>3. ஒரு கடவுள் கோட்பாட்டைக் கொண்ட சீக்கிய மதம் கடவுள் ஒருவரே என்ற கருத்தையும், ஒழுக்க நெறிகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியது.<br>4. சீக்கிய மதப் போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தினர்.<br>5. குருநானக்கின் போதனைகள் ஆதிகிரந்தம் ஆகும்.<br>6. இவர் பாபாநானக் என்றும் அறியப்படுகிறார்.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 x 5 = 35**

| | | |
|---|---|---|
| | **ஐந்து விடைக்குறிப்புகளுக்கு ஐந்து மதிப்பெண் அளிக்கவும்** | |
| 41 (அ) | **சிந்து நாகரிகம் ஏன் ஹராப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது**<br>1. இந்தியாவின் வடமேற்குப்பகுதிகளிலும், பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு 3000 கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடுகளும் மொத்தமாக சிந்து நாகரிகம் எனப்படும்.<br>2. இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால், இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்பப்படுகிறது.<br>3. ஹரப்பா நாகரிகம் திடீரென்று ஒரே நாளில் தோன்றிவிடவில்லை.<br>4. ஒரு நகர பண்பாட்டிற்கான கூறுகள் முதிர்ச்சிப் பெற்ற ஹரப்பாவின் காலத்தில் இருந்தது.<br>5. ஹரப்பாவுக்கு முதன்முதலில் பொ.ஆ.பி –(1826)–இல் வருகை தந்தவர் சார்லஸ் மேசன்<br>6. ஹரப்பாவில் ஆய்வு நடத்த காரணமாக இருந்தவர் சர் ஜான் மார்ஷல் ஆவார்.<br>7. சிந்து நாகரிகமும் அதன் சமகாலப் பண்பாடுகளும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மொத்தமாக 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.<br>8. லாகூரிலிருந்து – முல்தானுக்கு இரயில் பாதை அமைக்கும் போது ஹரப்பா நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது.<br>9. ஹரப்பாவில் ஒரு முத்திரையை அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் கண்டெடுத்தார். **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

<table>
<tr><td>(ஆ)</td><td>வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம்<br>1. ரிக் வேத கால அரசு முறை என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும்.<br>2. இனக்குழுவின் தலைவரே அரசியல் தலைவராக இருந்தார். அவர் ராஜன் (அரசன்) என்றழைக்கப்பட்டார்.<br>3. ராஜன் ஒரு பாரம்பரியத் தலைவராவார். ஒருவேளை அவர் சமிதி என்ற சபையினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம்.<br>4. அரசருடைய மிக முக்கியமான பணி இனக்குழுவைக் காப்பதாகும்.<br>5. நிலப்பரப்பின் மீதும் மக்களின் மீதும் அவருக்கு அதிகாரம் இருந்தது.<br>6. ரிக் வேதத்தில் சபா, சமிதி, விதாதா, கணா என்றழைக்கப்பட்ட அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>7. சபா என்பது வயதில் மூத்தோர் அல்லது செல்வந்தர்கள் பங்கேற்ற அமைப்பாகும், சமிதி என்பது மக்கள் கூடும் இடமாகும், விதாதா என்பது இனக்குழுக்களின் அமைப்பாகும்.<br>8. மதக்குருமார்கள் அரசருக்கு அறிவுரைகளை வழங்கினர்.<br>9. சேனானி என்பவர் படைத்தலைவர் ஆவார்.<br>10. ஒருவேளை மக்கள் தாமாகவே அரசனுக்கு வரி வழங்கியிருக்கலாம். அது "பலி" எனப்பட்டது.<br>11. நீதி நிர்வாகம் குறித்து குறிப்புகள் ஏதும் இல்லை. நிலப்பரப்பைக் கட்டுப்படுத்திய அதிகாரி "விரஜாபதி" எனப்பட்டார்.<br>12. படைக்குழுக்களின் தலைவர்களான கிராமணி என்பவர்களுக்கு விரஜாபதி உதவி செய்வார். கிராமங்களின் தலைவர் கிராமணியே ஆவார். (ஏதேனும் ஐந்து குறிப்புகள்)</td><td>5</td></tr>
<tr><td>42<br>(அ)</td><td>ஆசிவகமும் அதன் பரவலும்<br>1) வைதீக அறவொழுக்கத்தை மறுத்த துறவிகள் குழுக்கள் ஒன்றிலிருந்து, ஆசிவகம் உருவானதாக நம்பப்படுகிறது.<br>2) பௌத்த ஆவணங்களின்படி ஆசிவகம் என்ற பிரிவை தோற்றுவித்தவர் நந்தவாச்சா என்பவர் என்று கருதப்படுகிறது.<br>3) ஆசிவகர்களில் சிறந்தவரும் மூன்றாவது தலைவராக இருந்தவரும் மக்காலி கோசலர் ஆவார்.<br>4) ஆசிவகப் பிரிவின் தலைமையகமாக சிராவஸ்தி இருந்தது.<br>5) ஆசிவகர்கள் நிர்வாணத் துறவிகள், ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பியவர்கள்.<br>6) ஆசிவகர்களின் அடிப்படைக் கொள்கை, நியதி அல்லது விதி என்பதாகும்.<br>7) இது எல்லாமே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை என்பதால், இவ்வுலகில் எதையும் மாற்ற முடியாது.<br>8) ஆசிவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன.<br>9) அவை லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம் ஆகியன ஆகும்.<br>10) சித்திரவதை, காயம் இழைத்தல், கொலை ஆகியவற்றால் எந்தத் தீமையும் நேர்ந்து விடாது.<br>11) குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசிவகத்திற்குள் இருந்தார்கள்.<br>12) ஆசிவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும் நாடு முழுவதும் பரவியிருந்தது. (ஏதேனும் ஐந்து குறிப்புகள்)</td><td>5</td></tr>
<tr><td colspan="3">(அல்லது)</td></tr>
</table>


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| (ஆ) | **இந்தியாவில் பாரசீகர்களின் தாக்கம்.**<br>1) பாரசீகத் தொடர்பு பண்டைய இந்தியாவின் கலை, கட்டடக் கலை, பொருளாதாரம், நிர்வாகம் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியது.<br>2) கரோஷ்டி எழுத்துமுறை வடமேற்குப் பகுதியில் வளர்ச்சி பெற்றது.<br>3) அசோகர், கரோஷ்டி எழுத்து முறையை "காந்தாரப் பகுதி கல்வெட்டு" களில் பயன்படுத்தினார்.<br>4) அராபிக் மொழி போலவே கரோஷ்டியும் வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்பட்ட எழுத்து முறையாகும்.<br>5) இந்திய நாணயத்திற்கான சொல்லான கார்சா பாரசீக மொழியிலிருந்து வந்ததாகும்.<br>6) அசோகருடைய கல்வெட்டுக் கட்டளைகள் பாரசீக அரசர் டாரியஸின் கல்வெட்டுகளைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம்,<br>7) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் ஈரானியச் சொல்லான 'டிபி' க்குப் பதிலாக 'லிபி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.<br>8) அசோகரின் சாரணாத் தூணின் சிங்க உச்சி ராம்பூர்வால் தூணின் மணி உச்சி ஆகியன ஆக்கிமீனைட் தூண்களை ஒத்துள்ளன.<br>9) பாடலிபுத்திர அரண்மனையின் தூண்கள் பாரசீகக் கலையை ஒத்துள்ளன.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| 43<br>(அ) | **சங்ககாலம், வணிகர்கள், தொலைதூர வணிகம்**<br>1. தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.<br>2. மகத கைவினைஞர்கள் மாளவ உலோகப் பணியாளர்கள், மராத்திய எந்திரப் பொறியாளர்கள் போன்றோர் தமிழகக் கைவினைஞர்களோடு கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றியதாக மணிமேகலை குறிப்பிடுகின்றது.<br>3. தமிழ் – பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.<br>4. உப்பு வணிகர்கள் உமணர்கள் என்றழைக்கப்பட்டனர்.<br>5. அவர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.<br>6. சாத்து எனும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாகும்.<br>7. வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது.<br>8. ரோம தங்க வெள்ளி நாணங்களும் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன.<br>9. ரோமப் பேரரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் போன்ற தொலைதூரத்தில் அமைந்துள்ள நாடுகளோடும் வணிகத் தொடர்புகள் மேற்கொண்டதை தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.<br>10. தொடக்க வரலாற்றுக் காலத் துறைமுகங்கள் பலவற்றில் கிடைத்துள்ள அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள் கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் சுட்டுகின்றன.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | **மத்தியத் தரைக்கடல் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு**<br>1. பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்தியத் தரைக்கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது.<br>2. ரோமானியக் குடியரசு பொ.ஆ.மு. 27இல் பேரரசர் அகஸ்டஸ் தலைமையில் பேரரசு ஆயிற்று. | 5 |




Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 3. ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் பெற்ற வெற்றிகள் மூலம் குவிந்திருந்த மிகப்பெரும் செல்வங்களைப் பெற்றதால் ரோம் உலகிலேயே செல்வச் செழிப்புமிக்க நகரமாக மாறியது.<br>4. ரோமின் செல்வச் செழிப்பு இந்தியாவின் பல்வேறு பொருள்களின் தேவையை அதிகரித்தது.<br>5. குறிப்பாக, தமிழ்நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் துணிவகைகளின் தேவை அதிகரித்தது. ஒரு பெரும் வணிக விரிவாக்கத்தை ஏற்படுத்தியது.<br>6. ரோமானியக் கப்பல்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு நேரடியாகப் பயணிக்கத் தொடங்கின.<br>7. இறுதி விளைவாக இந்தியாவிற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த அளவிற்கு உயர்ந்தது.<br>8. ஆண்டொன்றிற்கு இருபது கப்பல்கள் என்பதிலிருந்து ஏறக்குறைய அன்றாடம் ஒரு கப்பல் என்பதாக அதிகரித்தது.<br>9. பொ.ஆ முதலாம் நூற்றாண்டில் எகிப்திய கடலோடி ஹிப்பாலஸ் – அரபிக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளை கண்டறிந்தார்.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | |
| 44<br>(அ) | **பெரோஸ் துக்ளக்கின் ஆட்சியை மதிப்பிடுக.**<br>1. அலாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துகள் மீண்டும் பிரபுக்களிடமே ஒப்படைக்கப்பட்டன.<br>2. அரசாங்க அலுவலர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தினார்.<br>3. வருவாய் நிர்வாகத்தை சீரமைக்க பல்வேறு வரிகளைக் குறைத்தார்.<br>4. அடிமைகள் நலன்களை கவனிப்பதற்கான தனியே ஓர் அரசுத் துறையை ஏற்படுத்தினார்.<br>5. இவரது ஆட்சி காலத்தில் நடைபெற்ற இரண்டு மங்கோலிய படையெடுப்புகளும் முறியடிக்கப்பட்டன.<br>6. வைதீக இஸ்லாமை பெரோஸ் ஆதரித்தார். தமது அரசை இஸ்லாமிய அரசாக அறிவித்தார்.<br>7. இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் மற்றும் பிராமணர்கள் மீதும் ஜிஸியா எனும் வரியை விதித்தார்.<br>8. புதிய இந்துக் கோவில்கள் கட்டுவதை பெரோஸ் தடை செய்யவில்லை.<br>9. புதிய கல்வி நிறுவனங்களையும் மசூதிகளையும் அரண்மனைகளையும் கோட்டைகளையும் நிறுவினார்.<br>10. பல பாசனத் திட்டங்களை பெரோஸ் மேற்கொண்டார்.<br>11. சட்லஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் அவரது வலுவான பொதுப்பணி வளர்ச்சிக் கொள்கையை சுட்டுகின்றன. **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | **வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரின் முன்னோடி**<br>1. விவசாயி சீர்குலைந்தால், அரசன் சீர்குலைவான் என ஷெர்ஷா நம்பினார்.<br>2. நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார்.<br>3. நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.<br>4. சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.<br>5. வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார்.<br>6. நுழைவு வரி, விற்பனை வரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன.<br>7. தங்க, வெள்ளி, செப்புக் காசுகளில் இடம்பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது. | 5 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 8. ஷெர்ஷாவின் நாணய முறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் அடித்தலமானது.<br>9. வணிகர்களின் வசதிக்காக சாலை ஓரங்களில் சராய் எனும் தங்கும் சத்திரங்களை அமைத்தார்.<br>10. விவசாயிகளின் வரியை பணமாக செலுத்த வலியுறுத்தினார்.<br>11. விளைச்சலில் ஒரு பங்கு வரியாக செலுத்த வேண்டும்.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | |
| 45 (அ) | **முகமது கவானின் ஆட்சி முறை மற்றும் இராணுவ நிர்வாகம்.**<br>1. மூன்றாம் முகமதுவின் தலைசிறந்த பிரதம மந்திரியாக முகமது கவான் விளங்கினார்.<br>2. கவான் பாமினி அரசின் நிர்வாகத் திறனுக்கு முக்கியமான காரணமாகத் திகழ்ந்தார்.<br>3. பாமினி அரசினை நிர்வகிக்க வசதியாக, நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார்.<br>4. மாகாணங்களின் எல்லைகளை வரையறை செய்தார்.<br>5. பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிக்காட்டுதலோடு வெடிமருந்தை பயன்படுத்தினார்.<br>6. முகமது கவான் அறிமுகப்படுத்திய நிர்வாக சீர்த்திருத்தங்கள் பாமினி அரசின் நிலையை உயர்த்தின.<br>7. ஆளுநர்களின் இராணுவ அதிகாரத்தை குறைத்தார்.<br>8. ஒரு ஆளுநருக்கு ஒரு கோட்டையே அனுமதிக்கப்பட்டது.<br>9. மற்ற கோட்டைகள் சுல்தானின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன.<br>10. அரசு அதிகாரிகளுக்க ஊதியங்களுக்குப் பதில் நிலங்கள் தரப்பட்டன.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 45 (ஆ) | **தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்கள்**<br>**வட இந்திய சீர்த்திருத்த இயக்கங்களின் தாக்கம்.**<br>1. பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் தமிழகத்தில் கிளைகளை பெற்றிருந்தன.<br>2. கேசவ சந்திர சென் சென்னைக்கு வருகை தந்து உரையாற்றினார்.<br>**இராமலிங்க அடிகளார்**<br>1. தனது பாடல்கள் மூலம் முற்போக்குச் சிந்தனைகளை பரப்பினார்.<br>2. மத வெறியையும், பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார்.<br>3. வடலூரில் சத்திய தரும சாலையை நிறுவி ஏழைகளுக்கு உணவளித்தார்.<br>4. சத்திய ஞானசபையை நிறுவினார்.<br>5. திருவருட்பா என்ற நூலை இயற்றினார்.<br>**அயோத்திதாச பண்டிதர்**<br>1. ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்று வாதிட்டார்.<br>2. மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தார்.<br>3. ஒருபைசா தமிழன் என்ற வார பத்திரிக்கையை தொடங்கினார்.<br>**வைகுண்டசுவாமிகள்**<br>1. தமிழ்நாட்டின் சீர்திருத்த இயக்கத்தில் வைகுண்டசுவாமிகளின் பங்கு மிக முக்கியத்துவம் பெற்றது.<br>2. இவருடைய போதனைகள் அய்யாவழி என்று அழைக்கப்பட்டது.<br>**(ஏதேனும் இரண்டு தலைப்புகள் விளக்கத்துடன்)** | 5 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 46<br>(அ) | **பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள்**<br>1. கங்கைச் சமவெளியில் உருவான அரசுகள் மற்றும் வேத மதத்தின் கடுமையும் கட்டுப்பாடுகளும் மதக்கிளர்ச்சியாக உருவாகின.<br>2. பிரதேச அடையாளங்களின் தோற்றம் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை அழித்தது.<br>3. சமூக அமைப்பு மாற்றத்தில் அதிருப்தி அடைந்த மேட்டுக்குடி மக்கள் அவைதீக மதங்களை நாடினர்.<br>4. வேத மதம் அனைத்து பகுதிகளிலும் பரவவில்லை.<br>5. இதனால் புதிய மதங்களை மக்கள் பின்பற்றுவது எளிதானது.<br>6. இதனால், இவர்கள் தமது பொருளதாரத் தகுதி நிலைக்கு இணையான சமூகத் தகுதி நிலையைக் கோரினர்.<br>7. பிராமணர்கள் பின்பற்றிய ஆசிரம வாழ்க்கை முறையில் சத்திரியர்கள் அனுமதிக்கப்படாதது வேத கருத்துக்களுக்கு எதிராக மாறின.<br>8. நகர மயமாக்கம், வணிக விரிவாக்கம் ஏற்பட்டதால் வணிகர்கள், சேத்கள் என்ற புதிய வர்க்கம் உருவாகின.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 46<br>(ஆ) | கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் அசோகப் பேரரசில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.<br>(i)கிர்னார், (ii)கௌசாம்பி (iii) எராகுடி (iv) லும்பினி (v)ராம்பூர்வா<br> | 5 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 47<br>(அ) | **தமிழ் அரசாட்சிகள்**<br>1. தமிழ் பகுதியின் அரசியல் நிலப்பரப்பு, சிறு சிற்றரசுகளாகத் துண்டுபட்டிருந்தது.<br>2. தமிழ் பகுதியில் மதுரையைத் தங்களின் தலைநகராகக் கொண்டு பாண்டியர், உறையூரைத் தங்களின் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சி செய்தனர். சேரர்கள் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர்.<br>3. அசோகரின் இரண்டாவது பாறைக் கல்வெட்டாணை, அவர்களை தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசுகள் என்று குறிப்பிடுகிறது.<br>4. சிறிய பகுதிகளை ஆட்சி செய்த பல போர்ப்பிரபுக்களும், சிற்றரசர்களும் (இவர்கள் வேளிர் எனக் குறிப்பிடப்படுவோர்) இருந்தனர்.<br>5. வடக்கே பேரரசுகள் விரிந்து காணப்பட்டன.<br>6. தமிழ் இலக்கிய தொகுப்பு தமிழ் பகுதி குறித்த விவரங்களை தெரிவிக்கிறது.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | **ஐரோப்பியர் வருகை குறித்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகள்**<br>➢ 1498 – வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை வருகை<br>➢ 1600 – ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழுத் தோற்றம்<br>➢ 1602 – டச்சு கிழக்கிந்தியக் கம்பெனித் தோற்றம்<br>➢ 1605 – டச்சுக்காரர்கள் மசூலிபட்டிணத்தில் குடியேற்றங்களை நிறுவுதல்<br>➢ 1610 – டச்சுக்காரர்கள் பழவேற்காட்டில் குடியேற்றங்களை நிறுவுதல்<br>➢ 1616 – டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றம்<br>➢ 1620 – டேனியர்கள் தரங்காம்பாடியை வாங்குதல்<br>➢ 1639 – ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.<br>➢ 1664 – பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றம்<br>➢ 1746 – முதல் கர்நாடக போர்<br>➢ 1749 – இரண்டாம் கர்நாடக போர்/ ஆம்பூர் போர்<br>➢ 1755 – பாண்டிச்சேரி உடன்படிக்கை<br>➢ 1756 – மூன்றாம் கர்நாடக போர் தொடக்கம்<br>➢ 1757 – பிளாசிப் போர்<br>➢ 1764 – பக்சார் போர்<br>**(ஏதேனும் ஐந்து நிகழ்ச்சிகள்)** | 5 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com